செய்தி வெளியீடு எண்: 485 நாள்: 07.03.2024

## செய்தி வெளியீடு

## இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (Indian National Space Promotion & Authorisation Centre– IN SPACe) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) 06.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்துறை பெருவழித்தடத்தை (TNDIC) செயல்படுத்துவதற்கான ஒரு முகமை நிறுவனமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) செயல்பட்டு வருகிறது. விண்வெளி மற்றும் பாதுகாப்புத்துறை தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற தொழில் பூங்காக்களை அமைத்து அதன் மூலம் தொழில் முனைவோர்களுக்கிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதுடன் இத்துறைக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதே TNDICன் நோக்கமாகும். வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப, TIDCO பல திறன்மிகு மையங்களை உருவாக்கியுள்ளது. அவற்றுள் புதிய கண்டுபிடிப்புகளுக்கான வடிவமைப்பு, தொழில்புரட்சி 4.0 மற்றும் மேம்பட்ட உற்பத்தி முறையை ஊக்குவிப்பதற்காக அமைக்கப்பட்ட திறன்மிகு மையங்கள் தமிழகத்தில் விண்வெளி மற்றும் பாதுகாப்புத் தொழில்துறையின் சூழலமைப்பை பலப்படுத்தும்.

தமிழ்நாடு விண்வெளித்துறை, வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில் துறையின் (Aerospace & Defence) ஒரு முக்கிய துணைப்பிரிவாகும், மாநிலத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கிய பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் பெருகிவரும் விண்வெளித்துறை சார்ந்த நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு. சுமார் 2,000 ஏக்கர் பரப்பளவில் விண்வெளி தொழில்துறை மற்றும் உந்துசக்தி பூங்காவை அமைப்பதற்கு டிட்கோ திட்டமிட்டுள்ளது. மேலும் இப்பூங்காவில் அமையவுள்ள நிறுவனங்களுக்கு ஆதரவாக ஒரு திறன்மிகு மையத்தை உருவாக்கவும் TIDCO திட்டமிட்டுள்ளது.

IN–SPACe என்பது இந்தியாவில் உள்ள அரசு சாரா நிறுவனங்களின் (NGE) அனைத்து விண்வெளித் துறை நடவடிக்கைகளுக்கான ஒற்றைச் சாளர முகமை நிறுவனமாகும். ஏவுதல் வாகனம் (Launch Vehicle), செயற்கைக்கோள்களை உருவாக்குதல், விண்வெளித்துறை சார்ந்த சேவைகளை வழங்குதல், விண்வெளி உள்கட்டமைப்பு வசதிகளை பகிர்தல் மற்றும் புதிய வசதிகளை நிறுவுதல் போன்ற பல்வேறு விண்வெளி நடவடிக்கைகளை ஊக்குவித்தல், மேற்பார்வையிடுதல் ஆகியன IN–SPACe–ன் செயல்படுத்துதல் மற்றும் கடமைகளாகும். விண்வெளித் துறைக்காக ஆதரவாக முன்மொழியப்பட்ட திறன்மிகு மையத்தை (CoE) அமைப்பதற்கு IN– SPACe–ன் நிபுணத்துவம் மற்றும் அனுபவமும் பெரிதும் பயன்படும்.

TIDCO நிறுவனம் IN–SPACe உடன் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை (MoU) 06.03.2024 அன்று தலைமைச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் ஏற்படுத்தியுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாட்டில்

விண்வெளித் தொழில்களை ஊக்குவிக்கவும் மற்றும் உற்பத்திப் பிரிவை தொடங்குவதற்குமான வழிமுறைகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

இதன்படி, விண்வெளித்துறை முன்னேற்றத்திற்காக TIDCO–வால் அமைக்கப்படவுள்ள திறன்மிகு மையத்திற்கு தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதலை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இந்த பூங்காவில் அவற்றின் உற்பத்தி வசதிகளை அமைப்பதில் IN–SPACe முக்கிய பங்காற்றும். மேலும், விண்வெளி மற்றும் அதைச் சார்ந்த துறைத் தொழில்களை தமிழ்நாட்டில் நிறுவ ஊக்குவிப்பதிலும் IN–SPACe பங்களிக்கும். TIDCO, விண்வெளி உற்பத்திக்கான நிறுவனங்களைத் தொடங்குவதற்குத் தேவையான தொழிற்பூங்காவை அமைக்கும். மேலும், விண்வெளித் தொழில்துறை நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகைகள் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை உருவாக்கும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் விண்வெளித்துறையில் புத்தொழில் (Start–ups) விண்கலம், ராக்கெட் மற்றும் உதிரிபாகங்கள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), வடிவமைப்பு, தயாரிப்பு போன்றவற்றிற்கு பெரிதும் உதவும். உலக விண்வெளி தொழில்துறையில் தமிழ்நாடு ஒரு மிகச்சிறந்த முனையமாக உருவெடுக்க இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பெரும் பங்கு வகிக்கும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் IN–SPACe தலைவர் டாக்டர் பவன் குமார் கோயங்கா, மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா இ.ஆ.ப, ஆகியோர் முன்னிலையில் கையெழுத்தானது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை டிட்கோ நிர்வாக இயக்குநர், திரு. சந்தீப் நந்தூரி ஐஏஎஸ், மற்றும் IN– SPACe இணைச் செயலாளர் திரு. லோச்சன் செஹ்ரா, இ.ஆ.ப ஆகியோர் பரிமாற்றிக்கொண்டனர்,

இந்நிகழ்வில் தொழில்கள், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலர் திரு. அருண் ராய், இ.ஆ.ப TIDCO சிறப்பு செயலர் /திட்ட இயக்குநர் திரு. பா. கிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப IN–SPACe புகழ்பெற்ற விஞ்ஞானி / இயக்குநர் (தொழில்நுட்பம்) திரு. ராஜீவ் ஜோதி, மற்றும் தமிழக அரசின் வான்வெளி மற்றும் பாதுகாப்பு (A&D) குழுவினர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in